REGISTERED AS NEWSPAPER

# பாதுகாவலன்

PATHUKAVALAN

மலர்: 122 15—11—1996

இதழ்: 6 விலை ரூபா 5

பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.

19 NOV 1996

**அருள் வாக்கு**

விழிப்பாயிருங்கள்,
நம்பிக்கையில் நிலைத்திருங்கள்
துணிவுடன் நடந்து கொள்ளுங்கள்
வலிமையுடன் செயற்படுங்கள்

(1கொரி 16:13)

# பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொள்ளுங்கள்

★ யாழ் மறைமாவட்ட நீதி சமாதானக் குழு வேண்டுகோள்

**போரின் அண்மைக்கால பரிமாணங்கள் அச்சத்துக்குரிய விதமாய் மனித மாண்பையும் உரிமைகளையும் மீறி வருவதை முன்னிட்டு போர்க்கால சர்வதேச மனித உரிமை ஒழுங்குகளை பேணுமாறுகோரி இவ் வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.**

இவ் அறிக்கையின் விபரம் பின் வருமாறு :

எமது மண்ணில் நடை பெற்று வரும் போரானது நாளாந் தம் மக்கள் மீது ஏற்றி வரும் சுமைகள் கவலைக்குரிய விதமாய் அதிகரித்தே வருகின்றன. அதிலும், அண்மைக்கால போர் முனைப்புக்களால் ஏற்பட்டு வரும் புதிய பரிமாணங்கள் கடினமான போர்ச்சூழல் ஒன்றுக்குள் எமது மக்களை இட்டுச் செல்வதை மிக்க கவலையுடன் அவதானித்து வருகிறோம். நீதியோடு கூடிய சமாதானம் என்பது எட்டாக்கனியாகவே தோற்றமளிக்கும் இவ்வேளையில் நடைபெறும் போரின் மத்தியிலும் மனித மாண்பும் உரிமைகளும் பேணப்படுவது அவசியமும் அவசரமும் என்று கருதுகிறோம்.

ஆகவே போர் முனைப்புகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் சகல தரப்பினரையும் போர்க்காலத்திற்கான பின்வரும் சர்வதேச ஒழுங்குகளைக் கடைப்பிடிக்குமாறு மக்கள் சார்பாக வலியுறுத்திக் கேட்டுக்கொள்கின்றோம்:

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## போல் பிறதர் காலமானார்

பிரான்சீஸ்கன் சகோதர சபையின் மூத்த உறுப்பினரும் மாத்தளை, மக்கோனா, மட்டக்களப்பு, சிலாபம் பகுதியில் பணியாற்றி பல அருட் சகோதரர்களை உருவாக்க உழைத்தவருமான அருட்சகோ. போல் பீரீஸ் CM.SF அவர்கள் 6-8-96 மாத்தளையில் 87வயதில் காலமானார். இவரது பூதவுடல் மாத்தளை பிரான்சீஸ்கன் சகோதர தலைமை மடத்தில் வைக்கப்பட்டு, இரங்கல்பலியுடன் சகோதர சபையின் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## யாழ் / கோட்டத்தின் பெருமை சேர்க்கும் புனித சாள்ஸ் மகா வித்தியாலயம்

● யா/கோட்டக்கல்வி அதிகாரி திருமதி. காங்கேயன்

யாழ்/ புனித சாள்ஸ் ம.வி. 120 வது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு இப்பாடசாலையில் பாடசாலை தின விழாவும், மலர் வெளியீட்டு நிகழ்ச்சியும் நடைபெற்றது.

பாடசாலை அதிபர் திருமதி P.F சின்னத்துரை இவ்விழா இக்காலத்தில் கல்வியில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும்எமது பாடசாலை என்ற பற்றை வளர்த்து வரும் மாணவச் செல்வர்களிடம் விதைப்பதோடு, தம் சோகத்தை சொல்லியே சோர்ந்து போகாது, கல்வியின் சிறப்பையும், இப்பாடசாலையினால் வளர்க்கப்பட்ட சூழலை வெளிப்படுத்தவுமே இவ்விழா எடுக்கப்பட்டது என்றார்.

( தொடர்ச்சி 4ஆம் பக்கம் )

## "இத்தொடக்க நாளைத் தந்த இறைவனுக்கு நன்றி கூறுவோம்"

— சவேரியார் குருத்துவக்கல்லூரி தொடக்கவிழாவில் யாழ் மறைமாவட்டப் பரிபாலகர்

"இன்று ஒரு நன்றியின் பெருநாள். கடந்த கால யாழ் நகரின் அழிவுகள், அனர்த்தங்கள் மத்தியில் இக்கல்லூரியைப் பாதுகாத்து இத்தொடக்க நாளைத் தந்த இறைவனுக்கு நாம் என்றும் நன்றி கூறவேண்டும்." — புனித சவேரியார் குருத்துவக் கல்லூரியின் திறப்புவிழாவின் போது யாழ் மறைமாவட்ட பரிபாலகர் அருள்திரு செல்வராஜா அடிகள் மேற்கண்டவாறு தெரிவித்தார். புனித சவேரியார் குருத்துவக்கல்லூரியை 1996/1997ஆம் ஆண்டு கல்வியாண்டிற்காக நவம்பர் மாதம் 11ஆம் திகதி யாழ்மறைமாவட்டப் பரிபாலகராக திருப்பலி ஒப்புக்கொடுத்து திறந்து வைத்தபோது அவர் மேலும் தெரிவித்ததாவது 'யாழ் மறைமாவட்டக் குருக்கள் எல்லாரும் இங்கு கூடியிருப்பது மிகவும் பொருத்தமானது. ஏனென்றால் இது ஒரு மறைமாவட்டவிழா. நாம் எல்லோரும் இறைவனுக்கு நன்றி செலுத்துவோம்" 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி யாழ் வெளியேற்றத்துடன் மூடப்பட்ட மேற்படி கல்லூரி கிளிநொச்சியிலும்

(தொடர்ச்சி 5ஆம் பக்கம்)

## விழிப்புடன் செயற்படுங்கள்

❊ சரோஜா சிவச்சந்திரன்

26.09.96 போயா தினமன்று வியாழன் மாலை 3 மணியளவில் குருநகர் புனித யாகப்பர் சமய சமூக மகளீர் மன்றத்தின் கருத்தரங்கு நடைபெற்றது. அக்கருத் தரங்கில் திருமதி சரோஜா சிவச்சந்திரன் "சமுதாயத்தில் இளம்பெண்களின் பொறுப்பு" என்ற தலைப்பில் உரையாற்றினார்.

அவர் தனது உரையில் சமுதாயத்தில் பெண்கள் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்பட வேண்டும் என்றும், அவர்கள் பிறரில் தங்கிவாழாது தமது சொந்தக்காலில் நிற்பதற்கு ஏற்ற வகையில் ஏதாவது ஒரு தொழில் பயிற்சியை யாவது கற்றிருக்க வேண்டும் என்றும் எங்கும் எவ்விடத்திலும் குற்றங்களைக் காணுமிடத்து கோழைகளாய் இராது துணிவுடன் அதனைச் சுட்டிக்காட்ட வேண்டும் என்றும் கூறினார். இது போன்ற பல கருத்துக்கள் அவரால் முன் வைக்கப்பட்டன.

இக்கருத்தரங்கானது எமது சமுதாய பெண்களுக்கு அவர்களுடைய பொறுப்புகள் பற்றியதொரு விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடியதாக அமைந்திருந்தது.

## நெடுந்தீவில் இறைவார்த்தைப் பணியாளர்

நெடுந்தீவுப் பங்கில் ஆரம்பிக்கப்பட்ட, 'இறைவார்த்தைப் பணியாளர்' சபை, பங்குத் தந்தை A.C கிறிஸ்தோப்பரின் அயரா உழைப்பினால் நற்பணியாற்றுகிறது.

இறைவார்த்தையை நாம் ஆர்வத்துடனும், பக்தியுடனும் வாசித்துச், சிந்தித்து, வாழ்வாக்குவதுடன் நின்றுவிடாது, இல்லங்களிலும் இறைவார்த்தை முதலிடம் பெறவேண்டும் என்ற உயர்ந்த இலட்சியத்துடன் செயற்பட்டு வருகிறோம். நம்மிடையே நடைபெறும் இன்ப, துன்ப நிகழ்வுகளில், குடும்பமாக இணைந்து, இறைவார்த்தையை வாசித்து, அர்த்தம் கொடுக்கும் வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்வதுடன், அட்டைகளில் அழகாக எழுதி, முக்கிய இடத்தில் தொங்கவிடப்படுகிறது. இல்லத்துள் நுழைவோர் கண்களில் இவ் வார்த்தை ஒரு உந்து சக்தியாக அமைகிறது. இப்படிப் பல முறை கண்ணில் படுவதால் மனதில் பதிகிறது, பலன்கொடுக்கவும் செய்கிறது.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)

## அடுத்த இதழ்



கிறிஸ்மஸ் சிறப்பிதழ்

## வவுனிக்குள பங்கில் நிவாரணப் பணிகள்

அண்மைக் காலங்களில் இடம் பெயர்ந்து வந்துகொண்டிருக்கும் மக்களுக்கு வவுனிக்குளப் பங்கிலே பல நிவாரண உதவிகள் கிடைக்கப் பெற்று வருகின்றன.

வடபகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்து வன்னிப்பகுதியின் வவுனிக்குளப் பங்கில் தங்கியிருக்கும் மக்களுக்கு அப்பங்கின் குருக்கள் அருட் தந்தையர் மௌலிஸ், தவராஜசிங்கம் ஆகியோரால் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மனித முன்னேற்ற நடுநிலையத்தின் உதவியுடன் பாண்டியன் குளத்தில் ஏழு வீடுகளும் பாலி நகரில் இருபத்து எட்டு வீடுகளும், 4ம் யூனிற்றில் இருபத்தெட்டு வீடுகளும் மல்லாவியில் ஏழு வீடுகளும் வவுனிக் குளத்தில், இருபது வீடுகளுமாக நூறு வீடுகள் அமைத்துக்கொடுக்கப்பட்டன.

03. 5. 96 அன்று முறைசாராக்கல்வி பாடசாலை நடைபெறாதபோதும் நாமாக எமதுகல்வியை வளர்த்துக் கொள்ளல் என்ற அடிப்படையில் மாணவ மாணவிகட்கு அருட்திரு போல் றொகான் மறை ஆசிரியர்கள் பங்கிராஸ், ஆரோக்கியநாதர் ஆகியவர்களால் முழு நாள் பாசறையாக நடாத்தப்பட்டது.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)

## வெளி வந்து விட்டது !

அருள்திரு பற்றிக் ஞானப்பிரகாசம் OMI அடிகள் எழுதிய "இறை ஞான ஈர்ப்புகள்" எனும் நூல் வெளி வந்து விட்டது.

தியான வாழ்விற்கு ஒரு பக்கதுணை !

சோர்ந்த உள்ளங்களுக்கு ஒரு சுமைதாங்கி !

கிடைக்குமிடங்கள் :

கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்
மறைக்கல்வி நிலையம், யாழ்ப்பாணம்
புனித லிகோரியார் ஆலயம், சாவகச்சேரி.

★ உன் உள்ளம் வலிமை பெறட்டும். ஆண்டவருக்காக காத்திரு (திருப்பாடல் 27 : 14) ★

# ''எல்லோரும் சொல்வதைப் போல் நீக்கிலாரின் புதுமைதான்...''

வெள்ளி விழா நாயகர்

அருட் திரு பீற்றர்

துரைரட்டினம் அடிகளாரு

டன் ஒரு செவ்வி.



செவ்வி கண்டவர் :

அருள் திரு. ரூபன் மரியாம்பிள்ளை

*வெள்ளி விழாநாயகர் அருட் திரு பீற்றர் துரைரட்டினம் அடிகளாரைப் பாதுகாவலன் சார்பில் பேட்டி காண பல தடைமுகாம்களையும் தாண்டி மிருசுவில் போகிறோம், 3...... வரம்பின் உள்ளேதான் இருக்கிறார். இறுதி எல்லை அவர்தான். ஆலய வளவினுள் ஒருவரைச் சந்தித்து ''என்ன உங்கட சுவாமிக்கு யூபிலியாம்......''ஓம் ஓம். அது இண்டைக்கில்ல. 20ம் திகதி, காலை 10-00 மணிக்குப் பூசை, மலர் வெளியீடும் உண்டு. பெரிய கொண்டாட்டம், கட்டாயம் வாங்கோ......'' ''சரி சரி'' அவரையும் தாண்டி அறைவீட்டை அடைந்து கேள்விகளைக் கேட்டோம்.*

★ **நீங்கள் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு 25 ஆண்டுகள் நிறைந்து விட்டனவாமே? உண்மையா?**

உண்மைதான். 25 ஆண்டுகள் மிக விரைவாகப்போய் விட்டதாகத்தான் நான் கருதுகிறேன். போன தடவை பாதுகாவலன் பேப்பரில் போடப்பட்ட யூபிலி செய்தியைப் பார்த்த ஒருவர் ஆச்சரியப்பட்டார்.

★ **நாம் என்ன சொன்னாலும் 25 ஆண்டு காலம் குறுகிய காலமல்ல. 1971ம் ஆண்டு உங்கள் குருப்பட்டம் என்றால் நீங்கள் 3 ஆயர்களின் கீழ் பணியாற்றி இருக்கிறீர்கள் அப்படித்தானே?**

3 ஆயர்கள் தான். ஆனால் ஆயர் எமிலுடன் அதிக காலம் குருமாணவனாகத்தான் இருந்தேன்.

★ **குறிப்பாக இந்த 3 காலம் பற்றியும் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

ஆயர் எமில் குருமாணவர்களின் ஒரு அன்புத்தந்தையாக இருந்தார். வளலாயில் அவருடன் செலவிட்ட நாட்களை மறக்க முடியாது, அவரின் கீழ் அதிக காலம் குருவாகப் பணிபுரிய கொடுத்து வைக்கவில்லை.

★ **உங்கள் குருத்துவத்தின் அதிக காலம் இளைப்பாறிய ஆயர் தியோகுப்பிள்ளையின் கீழ்த்தான் இருந்தது, அவரின் காலத்தை எப்படி எடை போடுவீர்கள்?**

மிக மகிழ்ச்சியான காலம். நாட்டுப் பிரச்சினையும் மோசமாக இருக்க வில்லை, எமது பணியில் அவர் அதிக சுதந்திரம் தந்தார். எம்மிடம் பொறுப்பைக் கொடுத்தபின் இடையிடையே தேவையின்றிக் குழப்பமாட்டார். எம் பக்கம் எப்போதும் நின்றார்.எம்மில் நம்பிக்கை வைத்திருந்தார்.

★ **அப்படியானால் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் பற்றி என்ன சொல்லுவீர்கள்?**

மிகவும் துன்பம் மிகுந்த காலம், இறைவனில் ஆழ்ந்த நம்பிக்கையுடன் செயலாற்றுகிறார். அன்பாக கதைப்பதில் வல்லவர், அன்பு மிக்க ஒரு ஆன்மீகவாதி அவர்.

★ **போன பாதுகாவலன் பத்திரிகையில் யாழ் ஆசனக்கோவில் தொடங்கி மிருசுவில் வரை உங்கள் பங்குப் பணித்தளங்களைப் போட்.........**

இல்லை,போன பத்திரிகையில் போட்டது போல் நான் யாழ் ஆசனக் கோவிலில் ஒரு போதும் பணியாற்றவில்லை. உயிலங்குளம், கரவெட்டி, நெடுந்தீவு, குருநகர், மயிலிட்டி, ஊறணி, இளவாலை, மாதகல், மிருசுவில்– இவைதான் எனது பணித்தளங்கள்.

★ **சரி, சரி, இவற்றில் எந்தப் பங்கு பற்றியாவது குறிப்பிட்டு ஏதும் சொல்லப் போகிறீர்களா?**

உயிலங்குளம் பங்கு 12 கோவில்கள். முதல்ப்பங்கு என்றபடியால் நல்ல பயிற்சித்தளமாக இருந்தது. மற்றும்படி எல்லாப்பங்குகளும் நல்ல பங்குகள், ஒவ்வொன்றும் வித்தியாசமானவை. ஒவ்வொன்றும் ஒரு தனி அனுபவமாகவே இருந்தது.

★ **உங்கள் 25 ஆண்டு காலத்தில் மறக்க முடியாத சம்பவம் எது என்று கேட்டால் என்ன சொல்லுவீர்கள்......**

நிறையச் சம்பவங்கள்...... புதிய சம்பவங்கள் பழையதை விழுங்கிக் கொண்டே வந்திருக்கின்றன. மிக அண்மையில் நடந்த மறக்க முடியாத சம்பவம் —96 யாழ் வெளியேற்றம். இந்துக்கள் — கத்தோலிக்கர் என்ற வேறுபாடின்றி அனைவருக்கும் தஞ்சமளிக்கும் இடமாக மிருசுவில் விளங்கியது. எங்களால் செய்யக் கூடிய எல்லாவற்றையும் நாம் செய்தாலும் முடிவு எப்படி என்ற மனப் பயமும் ஏக்கமும் இருந்தது. பெரும் அழிவைச் சந்திக்க வேண்டுமோ என மனம் அடித்துக் கொண்டே இருந்தது. எல்லாரும் சொல்வதைப் போல் ''நீக்கிலாரின் புதுமை தான்'' எல்லாமே அமைதியாக முடிந்தது. ஒரு அழிவும் ஏற்படவில்லை, இதை மறக்கவே முடியாது.

# யாழ் திருச்சபை வரலாறு

## 5. நவீன யாழ் திருச்சபை

## 16ஆம் 17ஆம் நூற்றாண்டுள்

அருள்திரு. இ. ம. ஜெயசிலன்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

### சங்கிலி அரசன்

மன்னாரில் 1544 ஒக்ரோபரில் ஞானதீட்சை பெற்று கிறிஸ்தவர்களானோர், அதே வருடம் டிசம்பரிலேயே சங்கிலி என அழைக்கப்படும் செகராசசேகரனால் கொல்லப்பட்டனர். புனித சவேரியாரின் கடிதம் (20.1.1545) யாழ்ப்பாண இராச்சியத்தை இலங்கை மன்னனின் அரசில் புறம்படுத்தி இருந்தது என்றும், இலங்கை அரசன் கிறிஸ்தவர்களை எதிர்க்கிறான் என்றும், மாறாக யாழ்ப்பாணத்தில் பெரும் ஆன்மீக அறுவடை 1545ஆம் வருடம் முடிவதற்குமுன் காத்துக்கிடக்கிறதென்றும் குறிப்பிடுகின்றது. இதிலிருந்து போர்த்துக்கேயர் சங்கிலியை நீக்கி அவன் சகோதரனை அரியணை ஏற்றக்கூடும் என அவர் எதிர்பார்த்திருக்கலாம் என அறிய முடிகின்றது.

1545 தை 27இல் புனித சவேரியார் எழுதிய கடிதத்தில் சங்கிலியன் கொலை செய்த கிறிஸ்தவர்களை வேத சாட்சிகளென்றும், சங்கிலியன் தண்டிக்கப்படவேண்டுமென்றும் வேறொரு யாழ்ப்பாண இளவரசன் கிறிஸ்தவனாக மாற விரும்புவதைக் கேள்வியுற்ற சங்கிலி, அவனைக் கொல்லுவித்தான் என்றும் அவன் கொலையுண்ட இடத்தில் வானத்தில் ஒரு நெருப்புச் சிலுவை தோன்ற, நிலம் சிலுவை வடிவில் பிளந்தது என்றும் இது கண்டு பலர் கிறிஸ்தவர்கள் ஆனார்கள் என்றும் குறிப்பிடுகிறார்.

யாழ்ப்பாண வைபவமாலை சங்கிலியன் கொன்ற இளவரசனின் சகோதரன் பரநிருபசிங்கம் எனவும் (தன் சகோதரனின் மரணத்தின்போது நிகழ்ந்த புதுமைகளைக் கண்டு கிறிஸ்தவனாகினான்). அவன் தென் இந்தியாவில் புகலிடம் புகுந்தான் எனவும் கூறுகின்றது.

### சோற்றுக் (அன்னக்) கிறிஸ்தவர்கள்

இம் மண்ணில் தமிழ் மக்கள் கிறிஸ்தவர்களாக மாறியதற்கான முக்கிய காரணங்கள், போர்த்துக்கேய அரசு நல்கிய சலுகைகள், பணம், உத்தியோகம் போன்றவை எனக்கொண்டு 19ம் நூற்றாண்டு கிறிஸ்தவ எதிர்ப்புப் பிரசாரத்தில் (RICE CHRISTIANS) சோற்றுக் கிறிஸ்தவர்கள் என்ற குற்றச்சாட்டை (சோற்றுக்காக மதம் மாறியவர்கள்) தமிழ், சிங்களப் பகுதிகளிலும் சிலர் முன்வைத்தார்கள்.

V.பேர்ணியோலா தமது நூலில். போர்த்துக்கேயர் காலம் பற்றிய முன்னுரையில் சிலர் அரசியல் இலாபத்துக்காக கிறிஸ்தவராக மாறினாலும், இலங்கையில் சோற்றுக் கிறிஸ்தவர் என்றோர் இருக்கவில்லை என எழுதியுள்ளார்.

உலக காரணங்களுக்காக கிறிஸ்தவர்களாக மாறியவர்கள்கூட விரைவில் தாங்கள் எதிர்பார்த்த நலன்களை விட நட்டங்களே அதிகம் என உணரத்தொடங்கினர். தம் குலத்தவரால் அந்நியப்படுத்தப்பட்டனர்; போர்த்துக்கேயரால் அவமதிக்கப்பட்டனர்; அரச ஊழியர்களால் ஏமாற்றப்பட்டனர்; சில சமயங்களில் தம் சொந்தக் குழுக்களாலும் இவர்கள் கைவிடப்பட்டனர்.

இதுமட்டுமல்ல, சங்கிலியனைத் தண்டிக்கும் போர் 1560ம் ஆண்டுதான் தாமதித்து நடைபெற்றதும், அதன் பின்னும் போர்த்துக்கலின் நேரடி ஆட்சி நிலவவில்லை என்பதும் உற்று உணரப்படவேண்டும். 1621ம் ஆண்டில்தான் இறுதியாக போர்த்துக்

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)



# வாசகர் கருத்து



நெருக்கடியான காலகட்டத்தில் முக்கியமாகச் செயல்படவேண்டிய யாழ். மறைமாவட்ட நீதிக்கும் சமாதானத்துக்குமான குழு அங்குரார்ப்பணம் செய்து, பிள்ளைகளை இழந்து, எங்கிருக்கிறார்கள். அதை அறிய யாரிடம் செலவோம் என்று பரிதவித்த பெற்றோருக்கு வாயில் பால் வார்த்த விதமாக அமைந்துள்ளது. அத்துடன் ஆன்மீக நற்கிரிகைகளுக்காக செயலூழியம் புரியும் மரியாயின் சேனை உச்ச அமைப்பான யாழ். கொமீசியம் தனது வைர விழாவைக் காணும் இச்சந்தர்ப்பத்தில் மேற்கூறிய விடயத்தை மனித நேய சேவையாகக் கருதி சமர்ப்பித்த பிரேரணையும் ஒரு திருப்பு முனையாக அமைந்திருக்கின்றது.

ஆசிரியதலையங்கம் ஆயுதகலாச்சாரத்தின் வளர்ச்சியினால் படிப்படியாக வளர்ந்துள்ள மனித உரிமை மீறல்களை தடுத்து நிறுத்தி, நிரந்தரமான சமாதானத்துக்கான வழிமுறைகளை உருவாக்க உதவுமென நம்புகிறோம். துணிவுடன் அவர் தெரிவித்த கருத்துக்களுக்கும் எமது பாராட்டுக்கள். முக்கிய செய்திகள் அனைத்தும் முன்பக்கத்தை அலங்கரித்துள்ளன. அதில் ஒன்று ஆசிரியபயிற்சி நெறிக்கான விண்ணப்பங்கள் கோரக்படும் சுருக்க விபரம். இது போன்று ஏனைய முக்கியமான விண்ணப்பங்கள் கோரலையும் பிரசுரித்தால் அதிகமான வேலை வாய்ப்பைக் கோட்டை விட்டு நிற்கும் இளம் சமுதாயத்திற்கு உரிய காலத்திற்குள் விண்ணப்பங்களை சமர்ப்பித்து வேலைவாய்ப்பைப் பெறுவதற்கு உதவியாயிருக்குமென்பது பலரின் அபிப்பிராயம்.

இறந்தோர் இறப்போருக்கு எழுதும் மடல் மரித்தோரை நினைவு கூரும் இந்நாட்களில் முதியோருக்கு அவர்கள் பிள்ளைகள் செய்யும் அநீதியை போலித்தனமான தற்கால சமுதாய சீர்கேட்டை படம் பிடித்துக்காட்டுகிறார் செல்வன் நியூமன் பொன்னையா. இளைஞனின் நெஞ்சக்குமுறல்தான் இவ்வாக்கம். இவ்வாக்கம் இங்கும், வெளி நாடுகளிலும் பெற்றோரை ஒதுக்கி ''அன்னையும் பிதாவும் பின்னடிக்கிடைஞ்சல்'' என வாழும் எம்மவரின் கண்களைத்திறக்குமா?

திருமதி. L. E. இராசநாயகம்

## நூல் அறிமுகம்

# விழுதுகள்

ஆசிரியர் :வி. பி. அருள் திரு வின்சன் பற்றிக் அ. ம. தி, எம்.ஏ.

கத்தோலிக்க எழுத்தாளர்களின் வெளியீடுகள் மிகஅரிதாக மின்னி மறையும் இக்காலப்பகுதியில் சமுதாய விழிப்புணர்ச்சிக்கு சலிக்காத பல படைப்புக்களைத் தந்த (வி. பி.) வின்சன்பற்றிக் அடிகளாரின் படைப்புகளில் உறவுகளில் இராகங்கள், 80ல் இருந்து 88 வரை, விடுதலை இறையியல், வித்தியாசமானவர்கள், இதயத்தேன், புதைபல் போன்ற பல படைப்புக்கள் வரிசையில் புதிய வெளியீடாக விழுதுகள் வெளிவந்துஉள்ளது பாராட்டுதற்குரியதே.

கருத்துச்செறிவுடன், கைக்கடக்கமாக சுருங்கக்கூறி விளங்கவைக்கும் 58தலைப்புகளுடன் அரிய பொன்மொழிகளும், அறிஞர்கூற்றுக்களின் துணை கொண்டு எல்லோர் மனங்களிலும் விழுதுவிட்டு நிலைக்கும் படைப்பாக விழுதுகள் அமைந்துள்ளது.

விலை ! 30ருபா வெளியீடு : அமோரா வெளியீடு

★ இப்பகுதியில் உங்கள் வெளியீடுகளையும் அறிமுகம் செய்யவிரும்புவோர் இருபிரதிகளை எமக்கு அனுப்பிவையுங்கள்

# விழுதுகள்

வணக்கம்

எமது சமூகத்தின் விழுதுகளான இளைஞர்களே! இளம் பெண்களே! இப்பகுதியினூடாக உங்களோடு உறவாடுவதில் மிக்க மகிழ்ச்சி.

வேர்கள் ஈடாட்டம் காணும் எமது சமூகத்தில் விழுதுகளின் வளர்ச்சி அவசியமானது. உங்கள் கரமிணைத்தலை நம்பி கை நீட்டுகின்றோம்.

இளைய தலைமுறையே இது உங்களிற்கான பகுதி. உங்கள் உணர்ச்சிகளை, சிக்கல்களை எழுச்சிகளை எழுதுங்கள். உள்ளடக்கமே அதன் உடல் வடிவைத் தீர்மானிக்கட்டும். கடிதங்கள் எம்மோடு கலந்துரையாடட்டும்.

'விழுதுகள்'' வாசகர் வட்டம் அமைப்பதில் ஆர்வமாயுள்ளோம். தனியாகவோ இணைந்தோ எழுதுங்கள். தொடர்புகள் கிடைத்தபின் தொடருவோம். தொடர்புகளிற்கு

"விழுதுகள்''
மே / பா பாதுகாவலன்
அ.பெ. 2
யாழ்ப்பாணம்

இன்னுமொன்று

இளமையின் மறுபெயர் கேள்வி என்பார்கள். இப்பகுதியை ஆரம்பிப்பது பற்றி சில இளைஞரோடு கதைத்த போதே சில வினாக்களை அவர்கள் தொடுத்தனர். அவற்றிற்கு விடை தந்து இம்முறையே ஒரு கேள்வி பதில் பகுதியை ஆரம்பிக்கின்றோம்.

உங்கள் வினாக்களிற்கு வானமே எல்லை.

எதையும் கேளுங்கள்: முடிந்தவரை பதில் தருவோம். பாருங்கள்.

இப்பகுதி ஆண் பெண் இருபாலாருக்குமான பொதுவான பகுதிதானே. ஆகவே நான் பொதுமொழியைக் கையாளத் தீர்மானித்தோம். ஆனால் எழுதத் தொடங்கியதும் நடை நொண்டுகின்றது. எமது நடை முறை, சிந்தனை மட்டுமல்ல அவற்றின் வெளிப்பாடான மொழி நடையும் கூட ஆண் ஆதிக்கத்திற்கே உட்பட்டுள்ளது.

மனிதத்தில் பாதியாம் பெண்மைக்கு உரிய இடம் அளிப்பதும் 'விழுதுகளின்' ஒரு முக்கிய பணியாகின்றது.

அடுத்த ''விழுதுக்கான'' கருத்துப் பரிமாற்றத்தில் இதையே தொனிப் பொருளாகக் கொள்கிறேன்.

உங்களிடமிருந்து கேட்க ஆர்வமாயுள்ளோம்.

ஆலோசனைகளும் வேண்டும்.

சில வார்த்தைகளாவது கட்டாயம் எழுதுங்கள்.

என்றும் அன்புடன்
சிநேகன்

---

''குஞ்சுகளே வாத்துகளை புல்வெளிக்கு
அழைத்துச் செல்கின்றன''

இத்தாலிய பழமொழி.

## விழுதுகளாய் வீழ்தலும்....

நண்ப,
உனதும்
எனதுமான
சமுதாயத்தின்
ஆணிவேர்களின்
உயிர்ப்புமைகள் மீது
வலிமை இழப்பும்
தளர்வும் ஏற்படுதல்
அதன்
உயிர்அசைவை
பெயர்த்து விடும்
தோழமையுள்ளமே
வா,
நுனிகளின்
பசியத் தளிர்களும்
கனியாய் மாறும்
செம்பூக்களும்
பிரசவிக்க
விழுதுகளாய்
நாம்
மண்ணில் ஆழப்புதைந்து
''இருப்பை''
தாங்கிக் கொள்வோம்

இங்கே
மேலே செல்வதற்காய்
பெயரும்
போட்டியும் கௌரவமும்
இன்னும்
யுத்தங்களும்
தமக்குள் மோதிக்
கொண்டிருக்கும்
நாம்
விழுந்து
புதைந்து
போலியற்ற
புதிய விருட்சத்தின்
பசுமை உயிர்ப்புக்காய்
விழுதுகளாவோம்

G. கெனத்

உருவகம்

## காகமும் குயிலும் சொல்லாத சேதியும்

சோகத்தின் பிரசவம் அதன் முகம் முழுவதும் பரவிக் கிடந்தது. தாழ்வு மனப்பான்மையின் குறிகாட்டியாய் முகம் வாடி தனித்து நின்ற கிளையில்லாத மரம் ஒன்றில் நம்பிக்கையெல்லாம் தொலைந்து விட்ட இருள் சூழலில் அது அமிழ்ந்து கொண்டிருந்தது.

காகத்தின் இந்த நிலை மிகவும் பரிதாபம் தோன்றும் நிலையாக இருந்தது. இப்போது அது மிகவும் கடினமாய் தனக்குள் பேசுவது சன்னமாய்க் கேட்கத் தொடங்கியது. ''சே நான் ஏன் பிறந்தேன்? எனக்கென்ன ஆளுமைகள் இருக்கு. கறுப்புத்தான் எங்கட பரம்பரையின் சாபம்,'' சொல்லிக் கொண்டு போகும் போது நீர்த்திரைகள் பட்ட மரத்தினை தழுவி நிலத்தை அடைந்து கொண்டிருந்தன. இவ்வேளை சடுதியாய் குயில் ஒன்று கூவியது. அடுத்த கணம் காகத்தின் பேச்சும், விசும்பலும் இயலாமையின் வெளிப்பாடாய். வெளிவந்தது. ''என்னால குயில் போல பாடமுடியாது. இருக்கிறதே'' என்று கூறி இனி எங்காவது தனித்து வாழ்வோம். என்று சொல்லி திசை தெரியாது பறக்க எண்ணியது.

''அந்த அளவுக்கு நீ கீழ்மை கொண்டவன் இல்லை'' ஆந்தை ஒன்று பறந்து வந்து உட்கார்ந்து கொண்டது. பின் அது எதுவும் பேசவில்லை. தனது கொடூரமான முகத்தை ஆனந்தமாக வைத்துக் கொண்டிருந்தது. திடீரென பிசாசுக் கூச்சலாய் அலறிவிட்டு,

''இரவின்
போர்வைக்குள்
மூடிக் கிடந்த
''வைகறையை''
பிரசவிக்கச் செய்வது
குயிலின் கூவல் அல்ல
கறுப்புக் காகங்களின் (உனது)
கரைதல்களே,
அதுதான்
பூமிக்கு
விடியலின் பூபாளம்'' என்று கூறி ஆந்தை அலறலோடு புன் சிரிப்பை உதிர்த்து விட்டு பறந்து போனது. காகம் இப்போது அழவில்லை, அது அடுத்த விடிகாலைக்கு கரைவதற்காக தன்னை ஆயத்தம் செய்து கொண்டிருக்கின்றது.

☐ கௌதமன் ☐

★ இன்றைய சூழ்நிலையில் இளைஞர்களின் முன்னெடுப்பான நடவடிக்கைகள் எவையாக இருக்கலாம்?

—ஜே. றெசாறியா
பேராலயம்

இன்றைய சூழ்நிலையின் முக்கியமான குணாம்சம் நிச்சயமற்ற தன்மையேயாகும். ஆகவே இத்தகைய நிச்சமற்ற சூழ்நிலையை நிலையான, நீண்ட திட்டங்களோடு நாங்கள் அணுகமுடியாது என்றே நான் கருதுகிறேன். ஆகவே இன்றைய இளைய தலைமுறையின் முன்னெடுப்பான நடவடிக்கைகள் எல்லாம் தேடல் நிறைந்தவையாக, பரிசோதனை முயற்சிகளாக, அதிக பட்ச நெகிழும் தன்மை கொண்டவையாகவே அமைய வேண்டும்.

இன்று எமது பயணம் ஏற்கனவே செப்பனிடப்பட்ட பாதையில் நடப்பதல்ல. மாறாக திசைதெரியாத இலக்கை நோக்கி பாதையமைத்து முன்னேறுவதாகும்.

செயற்பாடு —> மீளாய்வு—> செயற்பாடு—>, மீளாய்வு என்ற முன்னோக்கிய சுழற் பயணமாகவே எமது எதிர்காலம் அமையவேண்டும்.

எல்லோரும் பார்வை பெறவேண்டும் என உழைக்கும் சமூக விழிப்புணர்வுச் செயற் திட்டங்கள் முக்கியமானவை. அறியாமை இருளையகற்றும் கல்விப் பணியும், வறுமை போக்கும் சமூகநல செயற்பாடுகளும் பயனுள்ளவை. ஆயினும் விழிப்புணர்வடைந்த ஒரு சமூகத்திலேயே இப்பணிகள் நிறை பயனளிக்க முடியும் என்பதால் அத்தகைய செயற்திட்டங்களிற்கே முன்னுரிமை கொடுங்கள்.

## மனம் விட்டு

★ இன்றைய நிலை. இளைஞர்களிற்கு ஒரு புதிரான நிலை. முடிவினை எடுப்பதில் சிக்கலான நிலை. கொழும்புக்கு ஒரு புறம் மக்கள் செல்கின்றார்கள். இங்குள்ள நிலைகள் சகட ஓட்டம் போல் இருக்கின்றது. இந்நிலையில் இளைஞராகிய நாம் எங்கே, என்ன செய்வது என்று குழம்பியுள்ளோம்?

—யே. இக்னேசியஸ்
குருநகர்.

இடம் பெயர்வினால் சமூகக் கட்டமைப்புக்கள் குலைந்து, சிந்தனைப் பாரம்பரியம் சிதைந்து, நம்பிக்கைகளும், எதிர்பார்ப்புக்களும் பொய்த்து. முடிவில்லா நீண்டதொரு அழிவுச் சுழலில் சிக்கியிருப்பதான இன்றைய எமது இளைய தலைமுறையின் குழப்ப உணர்வு உங்கள் வினாவில் தொனிக்கின்றது.

மண்டையோடு என்ற மலையிலே நம்பிக்கையின் கடைசித் துளியும் சிலுவையில் தொங்க, மூன்று மணி வெய்யிலின் வெறுமையிலே வானப்பெருவெளியைத் துளாவி நின்ற யேசுவின் விழிகளிலும் இவற்றின் பொருள் என்ன என்ற குழப்பம்தான் தொனித்திருக்கும். கேள்விகள் ஆரோக்கியமானவையாக இருக்கும் வரை தேடல்களும் பயனுள்ளதாகவே இருக்கும். தொடர்ந்து தேடுங்கள். உங்களது தேடல் மண்ணை நோக்கியதாக, மக்களை நோக்கியதாக, அவர்களது முழுமையான உயிர்ப்பை நோக்கியதாக இருக்கட்டும்.

இயேசுவின் துன்பத்திலும், மரணத்திலும் ஒடிய சீடர்கள் இயேசுவின் உயிர்ப்பிலே மீண்டும் கூடினார்கள். உங்களது தெரிவு எப்படி? சீடர்களோடு ஓடப்போகின்றீர்களா அல்லது யேசுவோடு சுமக்கப் போகின்றீர்களா? சிலுவையின் பாதை கடினமானது. ஆனால் நான் அறிந்தவரை அதுவே விடுதலைக்கான ஒரே வழி.

---

உளவியல் பார்வையில்...

## வாழ்வின் நிறைவினை நோக்கி.... எஸ்.டி.

வாழ்வின் நிறைவைநோக்கி வாழ்பவர்கள், தங்களின் சுய அடையாளம் என்ன என்பதை அவர்கள் நன்கு தெரிந்து வைத்திருப்பார்கள். தாங்கள் யார், வாழ்க்கைக்கு எது அவசியம் வாழ்க்கையில் இருந்து தாம் எதனைப் பெற வேண்டும் என்பதும் அவர்களுக்கு நன்கு தெரியும். தங்களைப் பற்றி தாங்கள் கொண்டுள்ள மதிப்பீடுகளை மீளாய்வு செய்வார்கள். வாழ்க்கையையே கேள்வி கேட்பார்கள். தமது வாழ்வின் மையத்தை தொட்டு அந்த மையத்துடன் ஆற்றலைப் பெற்று வாழ்வார்கள். மற்றவர்களின் எதிர்பார்ப்புகளுக்காக வாழாமல், அவர்களின் விமர்சனங்களையும் பாராட்டுகளையும் பெரிது படுத்தாமல், உண்மையினால் உந்தப்பட்டு, தங்களுடைய நம்பிக்கை செயற்பாடு சரியென்று தெரிந்தால் சிறிதும் பின் வாங்காது முன்னேறிச் செல்வார்கள். எவ்வித சவால்களைச் சந்திக்க வேண்டி இருப்பினும் தைரியத்துடன் அவைகளுக்கு முகம் கொடுப்பார்கள்.

அவர்கள் உயிராற்றல் உள்ள மனிதராய் வாழ்வார்கள். மனித வாழ்வை முழுமையாக வாழப் பயப்பட மாட்டார்கள். வாழ்க்கையில் முழுக்க முழுக்க பங்குகொண்டு வாழ்வார்கள். ஏனோ தானோ வென்று வாழ்க்கையின் அர்த்தம் தெரியாமல் வாழ்க்கைக்கு தாங்களே அர்த்தம் கொடுத்து வாழ் வார்கள். தங்களை வாழ்க்கைக்கு அர்ப்பணித்து வாழ்வார்கள். அவர்கள் உண்மையின் உருவங்களாக நடமாடுவர். போலியை தூக்கி எறிவார்கள். அன்பு, உண்மை, நேர்மை, நீதி தான் அவர்களது ஆயுதம். முகமூடி அணிந்து அவர்கள் வாழ மாட்டார்கள். தங்களை சுற்றி மதில் எழுப்பி வாழ மாட்டார்கள். அவர்களின் சொல்லிலும், செயலிலும் முரண்பாடு இல்லாமல் ஒத்திசைவுள்ள இனிய நாதம் எழும்பும்.

அன்பு செய்ய அவர்கள் பயப்பட மாட்டார்கள். அன்பைப் பெறவும் அதனைக் கொடுக்கவும் அவர்கள் தயங்கமாட்டார்கள். வெறுமையிலும் இல்லாமையிலும் அல்ல, மாறாக அந்த அன்பை தங்கள் முழுமையிலிருந்து கொடுப்பார்கள்.

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)



# சிறுவர் விருந்து

## "என் பின்னே வாருங்கள்"

அன்புச் சிறார்களே!

நாம் இறைவனின் பிள்ளைகள். நாம் எமது தாயின் கருவில் உருவாக முன்பே இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர் பெயரால் பணிபுரிய தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள்.


அன்று நமது மீட்பராகிய யேசுக்கிறிஸ்து "என் பின்னே வாருங்கள்" என்று அழைத்து, 72 சீடர்களை தேர்ந்தெடுத்து தமக்கு முன் அனுப்பினார்.

அவர்களுள் 12 பேரை அப்போஸ்தலராகத் தேர்ந்து கொண்டார். இவர்கள் இயேசுவின் உயிர்ப்புக்குப் பின் அவரின் பணியைத் தொடர்ந்தனர்.

ஆம்! நாம் சிறுவர்களாக ஒன்றுமே அறியாதவர்களாக இருந்தபோது திருமுழுக்கு வழியாக எம்மையும் அவரது பணிக்காகத் தேர்ந்து கொண்டார். ஆகவே நாம் அனைவரும் "என் பின்னே வாருங்கள்" என்ற கிறிஸ்துவின் வார்த்தையின் பொருளை உணர்ந்து இறைவனின் பிள்ளை என்ற மனத்தோடு கிறிஸ்துவின் சீடரைப் போல் எம்மையும் அர்ப்பணித்து இறை தந்தையை மகிமைப் படுத்துவோம்.

அன்புடன்,
சிசிலி அக்கா.

## குறும்புதிர் 1




இடமிருந்து வலம்
1) யேசு மரித்த மலை.
2) ஈசாக்கின் தந்தை.

மேலிருந்து கீழ்
1) நாம் ஏழை களிடத்தில் காட்ட வேண்டியது.
2) ஆதித்தகப்பனின் பெயர்.
3) மோயீசன் இஸ்ராயேல் மக்களை அழைத்துச் சென்ற புனித பூமி.

★ 'சிறுவர் விருந்து' பகுதிக்கு எழுதும் மாணவர்கள் படிக்கும் ஆண்டு, பாடசாலையின் பெயர்களைக் குறிப்பிட்டு எழுதுங்கள்.

★ உங்கள் பதில்களையும், ஆக்கங்களையும் தனித்தாளில் ஒரு பக்கத்தில் மட்டும் எழுதி அனுப்புங்கள்.

அடுத்த இதழில் விடைகளும் வெற்றி பெற்றவர் விபரமும் வெளிவரும்.

---

## மேலோனின் காதில் அங்கு மெதுவாகச் சொல்லிவிடு!

ஆலயமணியோசை ஆர்ப்பரித்து அக்களிக்க
கோலாகலமாகக் கொண்டாடும் திருவிழா
அழுகை ஒலியோடு அமைதியாய் நடந்தேற
அன்னையே! நாமெல்லாம் என்ன பவம் செய்தோம்?

காலாதிகாலமாய் கன்னி உன் தரிசனத்தை
கோடானுகோடி பக்தர் கண்டு களித்தனரே
காலத்தின் கோலத்தால் தாயே! உன் அடியார்கள்
காடுகளில் போய் ஒதுங்கி காணாமல் ஒளித்தனரே!

பூலோக மேலோக ராணியே - நாம் வாழும்
பூலோகம் பெயர் மாறி எமலோகமான கதை
மேலோனின் காதில் அங்கு மெதுவாகச் சொல்லிவிடு!
மேலோகம் சென்றவளே! மேன்மைகொள் ராக்கினியே!

வெண்புறாக் கூட்டங்கள் படைஎடுத்து வந்ததுபோல்
உன்பிறகே கன்னியர்கள் குருமார்கள் நடந்துவர
கண்கொள்ளாக் காட்சியாய் உன்விழா இல்லாமல்
கண்ணீர் விழாவாய் நடந்தகதை சொல்லிவிடு!

உண்ணாமல் உறங்காமல் உயிருக்காய் போராடும்
கண்ணான உன் மக்கள் கலங்குகின்ற நிலை தன்னை
எண்ணாமல் வாழ்கின்ற இதயங்கள் மனம்மாற
விண்ணேறும் தாயே! உன் மகனாரை வேண்டிடுவாய்!

"நவாலியூர் நாயகி"
மானிப்பாய்.

# சமாதானத்துக்கான ஆயுதம் இதுவே

மக்கள் பலவகையாலும் துன்பப்பட்டு, சிதறுண்டு, அலைக்கழிக்கப்பட்டு குடும்பத்திலும், சமூகத்திலும் தீமைகள் பலவற்றால் சூழப்பட்டு வேதனையுறும் இக்காலகட்டத்தில், சமாதானத்தில், நிலைத்து இறைவார்த்தை என்னும் கேடயத்தால் பாதுகாக்கப்பட வேண்டிய நிலையில் நாம் அனைவரும் உள்ளோம்.

இறைவார்த்தை ஒன்றினால் மட்டுமே நாம் சமாதானம், உளவலிமை, நம்பிக்கை விடுதலை போன்ற அனைத்து நன்னெறிகளையும் பெறமுடியும். "எங்கே இறை வெளிப்பாடு இல்லையோ, அங்கே குடிமக்கள் கட்டுக் கடங்காமல் திரிவார்கள்" (பழ. 29:18).

எனவே வலுவற்ற இந்நிலையில்சமாதானத் தூதுவர்களான கடவுளுடைய மக்கள் வெளிப்பட வேண்டுமென்று நாம் அனைவரும் எமக்காகப் பரிந்துபேசிச் செபிக்க தூய ஆவியை அழைப்பது மட்டுமன்றி, நாம் இன்று எதிர்நோக்கும் சமூகக் கெடுபிடிகளிலிருந்து விடுதலை பெற இறைவார்த்தையை நாடிச் செல்வோம். சாலமோன் அரசன் தனது மக்களுக்காகச் செபித்ததுபோல், யூதித் என்ற விதவைப் பெண் கூட தனது இனத்தாருக்காக இறைவனிடம் வேண்டினாள் என்று திருவிவிலியத்தில் நாம் பார்க்கின்றோம். (அரசர் ஆகமம் 8: 30-53, யூதித் : 9 : 1-19). அன்று பெத்தாலியா மக்கள் ஒரே குரலாய் ஆண்டவரை நோக்கிக் கூப்பிட்டது போல் நாமும் ஆண்டவரைக் கூப்பிடுவோம்: "உள்ளம் தளர்ந்து போன இஸ்ரயேலர் தங்கள் கடவுளாகிய ஆண்டவரை நோக்கிக் கதறினர்; ஏனெனில், அவர்களைச் சூழ்ந்து கொண்ட பகைவர்களிடமிருந்து தப்பிக்க வழியே இல்லை. 20, காலாட்படை தேர்ப்படை, குதிரைப்படை அடங்கிய அசீரியரின் படைத்திரள் முழுவதும் முப்பத்து நான்கு நாள் இஸ்ரயேலரைச் சூழ்ந்து கொள்ள, பெத்தாலியாவில் வாழ்ந்தவர்கள் அனைவருடைய தண்ணீர்க்கலன்களும் வெறுமையாயின (யூதித் 7,19-20).

இறைவார்த்தையின் பண்புகளை நாம் உணர்ந்தவர்களாய் அதுவே எமது துன்ப துயரங்களிலிருந்து எம்மை விடுதலையாக்க வல்லது என்பதை உணர்ந்தவர்களாய் – விழித்தெழும் நேரம் ஏற்கனவே வந்துவிட்டது. இரவுமுடியப்போகிறது; பகல் அண்மையிலேயே உள்ளது என்பதை உணர்ந்தவர்களாய், இருளின் ஆட்சிக்குரிய தீமையான செயல்கள் அனைத்தையும் களைந்துவிட்டு, ஒளியின் ஆட்சிக்குரிய படைக் கலன்களாகிய உண்மையை இடைக் கச்சையாகவும், நீதியை மார்புக் கவசமாகவும், நற்செய்தியை அறிவிக்கும் ஆர்வத்தை மிதியடியாகவும் அணிந்து கொண்டு இறைவார்த்தையை போர்வாள்களாகஏந்திசமாதானத்துக்காகப் போரிடுவதில் சோர்வுறாம நிலையாய் இருப்போம். (காண் எபே. 6;14-16).

அப்போது "அந்நாள்களில் விழுந்து கிடக்கும் தாவீதின் கூடாரத்தை மீண்டும் உயர்த்துவேன். அதிலுள்ள கிழிசல்களைப் பழுது பார்த்துச் சிதைந்தவற்றைச் சீர்படுத்திப் பண்டை நாவில் இருந்தது போல் மீண்டும் கட்டியெழுப்புவேன்.

நான் அவர்களுக்கு அளித்திருக்கும் நாட்டிலிருந்து இனி ஒருபோதும் அவர்கள் பிடுங்கப்பட மாட்டார்கள்," (ஆமோ. 9: 11, 15) என்று எமது ஆண்டவர் கூறியதை அனுபவித்து மகிழ்வோம்.

திருமதி. S. புஸ்பராணி
யாழ்ப்பாணம்.

# யாழ்.கோட்டத்திற்கு...

இவ் விழாவிற்கு வருகை தந்த யா / கோட்டக் கல்வி அதிகாரி திருமதி காங்கேயன் தமது உரையில் மாவடிப் பள்ளிக்கூடம் 120ஆவது அகவைக் காணும்போது மகா வித்தியாலயமாக வளர்ந்துள்ளது. இவ்வித்தியாலயம் யாழ் கோட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு நிகராக நின்று போட்டிகளிலும் சாதனை பல படைத்து வளர்ச்சி கண்டு வரும் சிறந்த பாடசாலையாக திகழ்வது எமது கல்விப்புலத்திற்கே பெருமைதரும் விடயமாகும் என்றார்.

புனித பத்திரிசியார் கல்லூரி அதிபரும், புனித சாள்ஸ் மகா வித்தியாலைய பழைய மாணவருமான அருட் திரு பேணாட் தனது ஆசியுரையில் "எனது குருத்துவ அழைப்புக்கான வித்தை விதைத்தவர்கள் இக்கல்லூரியில் அன்று கற்பித்த ஆசிரியப் பெருந்தகைகளே. இன்று இவ் விழாவில் ஆசி கூறுவதில் மகிழ்வடைகிறேன். வாழ்க்கையில் சமுதாயத்தில் சகல மட்டத்திலும் வாழக் கற்பித்த இப்பாடசாலை 120 வது ஆண்டை காண்பது எமது சூழலுக்கு பெருமைதரும் விடயமாகும்" என்றார்.

120 வது ஆண்டு மலர்ச்செண்டின் அறிமுக உரையினை சென் யேம்ஸ் பாடசாலை அதிபர் S.தங்கராஜா நிகழ்த்துகையில், ".இது ஒரு ஆவணம். இப்பூச்செண்டு மாவடி – மகாவித்தியாலயமாகக் உழைத்த உள்ளங்களின் பதிலை தருகிறது. செண்டின் சிறப்புக்கு மேதகு ஆயர் தியோகுப்பிள்ளையின் செய்தி முதல் புனித சாள்ஸ்சின் வரலாறுவரை பல இதழ்களை சுவைத்து மயக்கத்தந்த பழைய மாணவர்கள் பாராட்டுக் குரியவர்களே என்றார். 120 வது ஆண்டு தினவிழாவையொட்டி இப்பாடசாலையின் பழைய மாணவரான தனிநாயகம் அடிகள் நினைவா தனிநாயகம் அடிகள் நூலகம்', திறக்கப்பட்டது.

# ஒரே ஒரு ஊரிலே....

## 6. எங்கு ஓடுகிறாய்?

சந்தைக்குச் சென்றிருந்த அந்தப் பணியாளன் மூச்சிரைக்க இரைக்க தன்னுடைய முதலாளியிடம் திரும்பி வந்தான்.

"ஐயா இன்று சந்தையில் யமனைப் பார்த்தேன், அவன் என்னை ஒரு விதமாக முறைத்துப் பார்த்தான். என்னுடைய உயிரை எடுக்கப்போகிறானோ என்னவோ, தயவு செய்து எனக்கு ஒரு குதிரை தாருங்கள், நான் பக்கத்து ஊருக்கு ஓடிச் சென்று தப்பித்துக் கொள்கிறேன்" என்றான்.

அவனது நிலையைப் பார்த்து பரிதாபப்பட்ட முதலாளியும் மிக விரைவாகச் செல்லக் கூடிய குதிரை ஒன்றை அவனுக்கு கொடுத்து அனுப்பி வைத்தான்.

மாலையில் ஏதோ விடயமாகச் சந்தைப் பகுதிக்குச் சென்ற முதலாளி இன்னும் அங்கு யமன் உலாவித் திரிவதைக் கண்டு அவனிடம் கேட்டான் "ஐயா யமதர்மரே இன்று காலை எனது ஊழியனை ஒரு விதமாய் முறைத்துப் பாத்தீராமே. அதன் அர்த்தம் என்ன" என்று.

நான் அவனை முறைத்துப் பார்க்கவில்லையே. இந்த ஊரில் நிற்கிறானே என்று ஆச்சரியத்துடனல்லவா பார்த்தேன்" இது யமனின் பதில்.

இதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது. இது அவனுடைய சொந்த ஊர். இங்குதானே அவன் இருப்பான்": இது முதலாளி.

"இல்லை. இன்றிரவு பக்கத்தூரில் அவன் என்னோடு சேர்ந்து கொள்வான் என்றிருக்கிறது. அப்படியிருக்க அவன் இங்கே நிற்கிறானே என்றுதான் ஆச்சரியப்பட்டேன்" என்றான் யமன்.

பெரும்பாலானோர் சாவுக்குப் பெரிதும் பயப்படுகின்றனர். அதிலிருந்து தப்ப எடுக்கும் முயற்சியால் எப்போதுமே வாழத் தவறி விடுகின்றனர். இது கார்த்திகை மாதம். சகல ஆத்துமாக்கள் காலம். நாமும் எமது சாவைச் சந்திக்கத் தயார்படுத்துவோமா?

ருவகம்

## நியமம்

— செம்பியன் செல்வன்

மழை பேய்மழை
வெள்ளம் கரை புரண்டோடியது.
ஆறு தன்னடக்கத்தைக் கைவிட்டது.
நீர் கரை மேவிப் பாய்ந்தது.

பக்கத்து மேட்டணைகள் கரைந்தன. குடிசைகள் காலிழந்து விழுந்தன... மக்கள் உண்ணாட்டில் மேட்டு நிலங்களை நாடி ஓடினர்... மரங்கள் மண்ணிழந்த கவலையில் சாய்ந்து தலைவிரிகோலமாய் விழுந்தன... மிருகங்கள் எங்கெங்கோ அடித்துச் செல்லப்படும் பயத்தில் தத்தம் இனங்களைக் கதறி அழைத்தன. உயிர்களின் பயணம் எங்கோ... எங்கோ அந்தரத்தில் அலையும் மகரந்த மணிகளென...

அழிவு.
நாசம்.
மரணம்.
மழை ஓய்ந்தது.
சூரியன் சுள்ளென எறித்தான்.
என்ன மாயை?
நீர் எங்கே மறைந்தது?

மீண்டும் ஆறு ஆறாகியது... ஞானியர் உள்ளம் என ஒடுங்கியது... தாயின் முலையிலிருந்து சுரக்கும் பாலென வெள்ளித் தடம் காட்டி... உயிரின் ஒளியாக மின்னி ஓடியது.

கரைமேவிப் பாய்ந்த பரப்பெல்லாம்... அரிப்புக்களாகி சிதையுண்ட பரப்பெல்லாம் கருமை பூத்து சமவெளியெனப் பரந்து... ஏற்றமோ இறக்கமோ அற்ற சமுதாய வெளியாகி...

இறந்தவை யாவும் சமுதாய வயல்களின் குன்றாத வளமாகி...

ஓ! ... எதுவும்... எவையும்... எமைவிட்டு நீங்காத ஆன்மாவாகி... நித்தியமாக..

சூரியசுழற்சியின் வரவும் செலவுமான இரவு பகல் கூறும் நியமங்களில்... முன்பிருந்ததைவிட அதிகமான மனிதஉயிர்கள்... புதிய சமவெளி நோக்கிவர... புதுக்குரல்கள்... புதிய ஒளி ஓ!... புத்தம் புது அரும்புகள்... நவதானியக் கதிர்கள்... என்றுமில்லா வீரிய மதலைகளாக... கரும் பச்சைவெளிகளை நிறைக்கலாயின.

---

இறைபத நிறைவில் இணைந்த

## முதலாம் வருட நினைவு



செல்வி
றோசலின் தவமணி
சூசைப்பிள்ளை

அன்னை மடியில்
26.11.1943

ஆண்டவன் மடியில்
19.11.1995

மூண்ட துயர் மிருசுவிலின் மண்மேற் பொங்க
ஆண்டொன்று கணப்பொழுதில் மறைந்த தன்பே
அருஞ்சொத்தே பெறற்கரிய ஆணி முத்தே
மூண்டதுயர் மிருசுவிலின் மண்மேற் பொங்க
முழுநிலவை இடம்பெயர்வாற் காலன்கொண்டான்
நீண்டவழி போனாலும் குழந்தை யுள்ளம்
நெஞ்சினிலே நீங்காது நிலைத்த தம்மா
ஆண்டவனின் பொன்னடிமேல் எங்களுக்காய்
அநுதினம் வேண்டியருள் பொழிந்து காப்பாய்!

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 19.11.96 செவ்வாய்க்கிழமை காலை 6.30 மணிக்கு மிருசுவில் புனித நீக்கிலார் ஆலயத்திலும், அவரின் பிறந்தநாள் ஞாபகார்த்தமாக 26.11.96 செவ்வாய்க்கிழமை காலை 6.15 மணிக்கு யாழ் புனித அடைக்கல அன்னை ஆலயத்திலும் ஒப்புக்கொடுக்கப்படும் இரங்கற்திருப்பலிகளில் பங்கு கொண்டுசெபிக்கும் வண்ணம் அன்பு நெஞ்சங்களை வேண்டிநிற்கின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்,
தாய், சகோதரர், சகோதரிகள்,
மச்சான்மார், பெறாமக்கள்.

இல. 5, மாட்டீன் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். A/21/96

---

எந்த நல்லவனையும் தடுமாற வைப்பதும்

குற்றம்புரிய வைப்பதும் ஒரு கணப்பொழுதுதான்.

மனச்சாட்சி மூடி மறைக்கப்படும்
கணப்பொழுதில்தான்

சாத்தானாக மாறிவிடுகின்றான் மனிதன்.

---

இறை பத நிறைவில்
31 ஆம் நாள்



அமரர். S. E. ஆனந்தராஜா
(ஓய்வு பெற்ற கட்டட படம் வரைபவர்)

அன்னையின் மடியில் 18-3-1933 | ஆண்டவன் அடியில் 24-10-1996

மங்காத ஒளியாக மனதினில்
நீ நிலைத்திட்டாய்
முப்பத்தி யொரு நாட்கள்
ஒடி மறைந்தாலும்
மீண்டு வரும் நினைவலையால்
உருகி யழும் எம்முள்ளம்
எந் நாளும் உம்மையே
எண்ணி யெண்ணி
கரும்பான உம் நினைவுகள்
யாவும்
கண் முன்னே என்றென்றும்
நிழலாடுதே!

அன்னாரின் ஆன்மசாந்திக்காக 31 ஆம் நாள் 23.11.1996 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ், அடைக்கல அன்னை ஆலயத்திலும், 41ஆம் நாள் 2.12.1996 திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு கிலாலி, மாதா கோவிலிலும் ஒப்புக் கொடுக்கப்படும் இரங்கள் திருப்பலிகளில் பங்கு கொண்டு அன்னாரின் ஆன்மாவுக்காக செபிக்கும் படி அன்பு நெஞ்சங்களை வேண்டி நிற்கிறோம்.

பிரிவால் துயருறும்
தாய், மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
6/1 மாட்டின் லேன்
யாழ்ப்பாணம் A/22/96

---

## 1- வது வருட நினைவு

திருமதி.
மேரி லில்லி செலஸ்தீன்



மலர்வு: 08. 09. 1941 | உதிர்வு: 24. 11. 1995

ஓராண்டு ஒடியதே
அம்மா நின்பிரிவால்
நீராடும் கண்களில்
நிழலாடுதே உம் அன்புருவம்
பல்லாண்டு தான் சென்றாலும்
ஆறாது எம்துயரம்
நீங்காது உம்நினைவு

இவரின் ஆன்ம சாந்திக்காகத் தாழையடி புனித. அந்தோனியார் ஆலயத்தில் 23.11.96 சனிக்கிழமை காலை 6.15 மணிக்குத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

நீங்கா நினைவுகளுடன்,
பிள்ளைகள், மருமகன்,
பேத்தி, சகோதரர், உறவினர்.
'' செங்கதிர் இல்லம் ''
தாழையடி. A/26/96

---

## இத் தொடக்க......

இப்போ மடுவிலும் தற்காலிகமாக இயங்கி வருகிறது. யாழ் இறையியல் கல்லூரியையும் இயக்கும் நோக்குடன் ஆரம்ப மெய்யியல் மாணவர்களுடன் மேற்படி கல்லூரி திறந்து வைக்கப்பட்டுள்ளது. இராணுவத்தினர் மேற்படி கல்லூரியை நவம்பர் 1ஆம் திகதி விட்டு வெளியேறிய பின்னர் கல்லூரியை இயக்குவதற்கான ஒழுங்குகளை ஆரம்ப மெய்இயல் துறையின் அதிபர் அருட்திரு. ரூபன் மரியாம்பிள்ளை செய்திருந்தார். நவம்பர் 12 ஆம் திகதி முதல் வகுப்புக்கள் 96/97 கல்வியாண்டிற்காக நடைபெறும் என்று அவர் தெரிவித்தார். மதிய போசனத்துடன் தொடக்கவிழா நிறைவுற்றது.

---

## 4ஆம் வருட நினைவு



M. K. K அருட்பிரகாசம்
பண்டிதர்
இளைப்பாறிய அதிபர் (O.L.R)

தோற்றம் 4.12.1914 | மறைவு 15.11.1992

வாழ்வில் அன்பு செய்தவர்கள் மரணத்திலும் நினைவு கூருவார்களாக.

இவரது ஆன்ம சாந்திக்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் 15.11.96 வெள்ளிக்கிழமை காலை 6.00 மணிக்கு இரங்கற்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
சகோதரர், பேரப்பிள்ளைகள்.
A/23/96

---

## 31 ம் நாள் நினைவு

திருமதி யோகம்மா மரியாம்பிள்ளை
(ஓய்வுபெற்ற ஆசிரியை –யாழ். திருக்குடும்ப கன்னியர்மடம்)



மலர்வு 16.07.1921
உதிர்வு 31.10.1996

சீவியத்தில் என்னை நேசித்தவர்களே மரணத்திலும் என்னை மறவாதீர்கள்!

இவரது ஆன்மா இளைப்பாற வேண்டி 30.12.96 சனிக்கிழமை காலை 6 மணிக்கு யாழ். புனித யுவானியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

கணவன், மகன், மருமகள்,
பேரன், சகோதரிகள், அருட்சகோதரிகள், பெறாமக்கள்,
மருமக்கள், மைத்துனிகள்,
மைத்துனர்கள்,
268 பிறவுண் வீதி, A/27/96
யாழ்ப்பாணம்.

---

## 31ஆம் நாள் நினைவு



மனுவேற்பிள்ளை
பஸ்ரியாம்பிள்ளை (இராசையா)
இறப்பு: 9.10.1996

இரக்கமுள்ள யேசுவே மரித்த அடியான் மனுவேற்பிள்ளை பஸ்ரியாம்பிள்ளையின் ஆன்மா மீது உமது திருமுக ஒளியைப் பிரகாசிப்பித்தருளும்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக 9.11.1996 சனிக்கிழமை 4.30 மணிக்கு மானிப்பாய் புனித அன்னம்மாள் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக பிரார்த்திக்கும் படி அன்புடன் அனைவரையும் வேண்டுகின்றோம்.

இவரின் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள்
உற்றார், உறவினர்
A/24/96

---

## 1ம் ஆண்டு நினைவு



திமருதி அல்பிறட் மாக்கிறெற்

தோற்றம். 22- 07- 1932 | மறைவு 18- 11- 1995

நித்திய இளைப்பாற்றியை இவர்களுக்கு அளித்தருளும் யேசுவே. முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!

இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக தாளையடி புனித அந்தோனியார் ஆலயத்தில் 18-11-96 காலை 6-15 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் பங்குபற்றி இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டும்படி அன்புடன் வேண்டுகிறோம்.

அன்புப் பிள்ளைகள்.
A/25/96

## எம்கருத்து

### பிள்ளைகளின் வளமான வாழ்வு

இன்றைய காலகட்டத்தில் மனிதசமுதாயம் பல்வேறு நிலைகளிலும் பாதிப்புக்களையே எதிர்நோக்கி வருகின்றது. இவற்றின் காரணமாகக் கூடுதலான தாக்கங்களை அநுபவிப்பவர்கள் பிள்ளைகளே. உளவியலாளரின் கூற்றின்படி வாழ்வின் முதல் வருடங்களின் அனுபவங்களே அவர்களின் முழுவாழ்வையும் நிர்ணயிக்கின்றன. எனவே சிறுபராயத்தின் அவர்களது அனுபவங்கள் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி, அவர்களது பிற்கால வாழ்வைக் குட்டிச் சுவராக்குவதைத் தடுக்க வேண்டுமேயானால், சிறியோரின் வாழ்வு பற்றிப் பெற்றோரும் பெரியோரும் அதிக அக்கறை காட்டுவது இன்றியமையாதது.

இன்று பெற்றோராகவும், ஆசிரியராகவும், வழிகாட்டிகளாகவுமிருப்பது மிகவும் கடினமானது. உணவு, உடை, உறையுள் கொடுப்பது மட்டும்தான் பெற்றோரின் கடமையன்று. பெரியோரைப் பார்த்து அனைத்திலும் பின்பற்ற விரும்பும் பிள்ளைகளுக்கு முன்மாதிரிகையே அத்தியாவசியமானது. சொல்வதைச் சொல்லும் கிளி; ஆனால் செய்வதைப் பார்த்துச் செய்பவர்கள் பிள்ளைகள். எனவே, பிள்ளைகள் வாழ்வில் அன்பும், பண்பும், பாசமும், நற்பழக்கமும், இறைவிசுவாசமும் குடிகொண்டு அவர்கள் நல்லவர்களாக வளர வேண்டுமேயானால் பெற்றோர், மற்றோரின் முன்மாதிரிகை பெரிதும் தேவை.

சிறுவயதிலிருந்தே பிள்ளைகளின் 'அவசியமற்ற' கதைகளை விரும்பிச் செவிமடுக்கும் பெற்றோரிடமேயே வளரும் போதும், வளர்ந்த பின்னும், ஒருவர் தன் உள்ளத்தைப் பகிர முன்வருவார். உடல், பொருள் தேவைகளை விட உளப்பாதிப்புக்களைப் பகிரும் செயற்பாடு இன்று கட்டாய தேவையாகவுள்ளது. பிறரில் எந்தளவிற்குப் பிள்ளை நம்பிக்கை வைக்கின்றதோ, அந்தளவிற்கு மனம் திறந்து பேச அது பழகிக் கொள்ளும்.

இன்றைய உலகம், பல்வேறு சிக்கல்கள் நிறைந்து கடினமானதாக மாறியுள்ளது. எதிர்பாராத நேரத்திலும், சூழலிலும் பல்வேறு தீர்மானங்களைக் குறுகிய காலத்தில் எடுத்துச் செயற்படவும் வாழவும் வேண்டியுள்ளது. இதைக் குறிக்கோளாகக் கொண்டு பிள்ளைகளுக்கு மிதமிஞ்சிய பாதுகாப்புக் கொடுக்காமலும், அவர்களைக் கிணற்றுத் தவளைகளாக வாழ விடாமலும், தாமே சில காரியங்களில் சுய தீர்மானம் எடுப்பதற்கு, அவர்கள் பழகிக் கொள்ளத் துணையளிக்க வேண்டும். பாரம்பரியங்களிலும் முரட்டுக் கௌரவங்களிலும் அவர்களைச் சிக்கவைக்காது பரந்த நோக்கோடு அனைவருடனும் பழகவும், அன்பையும், நன்மைகளையும் பகிரவும் பெறவும் ஊக்குவிக்க வேண்டும். எதிர்பாராத நிகழ்வுகள் மலிந்து கிடக்கும் எம் சமுதாயத்தில் நற்பண்புகளை விட்டுக் கொடாது, தளர்ந்து பழகுவதும் நன்மை பயக்கும்.

வீட்டில் வளர்க்கும் பிராணிகள் எங்கு இருக்கின்றன என்று தெரிந்து கொள்ளும் பெற்றோர் சிலர் தம் பிள்ளைகள் எங்கே என்று அறியாதிருக்கும் நிலையில் வாழ்கின்றனர். உணவையும், உடையையும்கொடுத்து, படிக்க ஒரு பாடசாலையில் சேர்த்து விட்டால் தம்கடமை முடிந்தது என்று எண்ணும் பெற்றோர் பலர் இன்னும் உளர். இதற்கு மாறாகத் தம் பிள்ளைகளின் வாழ்வில் இரண்டறக் கலந்து, எந்த நேரத்திலும் தம்முடன் இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையுணர்வு பிள்ளைகளின் வாழ்வை நிச்சயமாக மேம்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

### வவுனிக்குள்...

04.03.96 அன்று இளைஞர் இளம் பெண்களுக்கான கருத்தரங்கை அருட் தந்தை ஜொயல், தலைமைதாங்கிநடத்தினார். "வாழ்வில் மகிழ்ச்சியாக இருத்தல், நம்பிக்கை தான் வாழ்வின் அடிப்படை, இறை சித்தத்திற்கு ஏற்ப நடக்க எப்போதும் ஆயத்தமாக இருத்தல், நடப்பின் உண்மைகளை சரியாக விளங்கிக் கொள்வதில் விழிப்பாய் இருப்பதில் இளைஞர் யுவதிகளின் பங்கு என்ற தலைப்புக்களின் கீழ் முழுநாள் பாசறையாக நடைபெற அருட்தந்தையர்களான தவராஜசிங்கம், மௌலிஸ், போல் றொகான் ஆகியோரின் ஒத்துழைப்புடன் முழுநாள் பாசறையாக நடைபெற்றது. இயக்குனர் அருட்திரு. கில்லறி ஜெபநேசன் அடிகளாலும், உதவி இயக்குனர் அருட்திரு. அன்ரனிதாஸ் அடிகளாலும் இவ் வீடுகள் திறந்து வைக்கப்பட்டன.

அத்தோடு "யேசு சபையினரின் இடம் பெயர்ந்தோர்க்கான சேவை" (J.R.S) உதவியுடன் சுமார் நூற்றி நாற்பது குடும்பத்தினருக்கு வீடமைப்பதற்கு கிடுகுகளும் சுமார் ஐந்நூறுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுகளும் வழங்கப்பட்டது.

மேலும் மனித முன்னேற்ற நடுநிலையத்தினரால் மல்லாவி வைத்தியசாலை வளவினுள் சிற்றூழியர்கள் தங்குவதற்கு விடுதி அமைக்கும் வேலைகளும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

மக்களின் துயர் துடைக்கும் பணியில் காலத்திற்கு ஏற்ப சேவை செய்வதில் குருவானவர்களும், மக்கள் உதவி வழங்கும் நிறுவனங்களும் ஈடுபட்டு வருவது இடம் பெயர்ந்த மக்களுக்கு பெரிய ஆறுதலாகவும், பேருதவியாகவும், இருப்பதைக் காணக்கூடியதாக உள்ளது.

இ. சா. பங்கிராஸ்
மறைஆசிரியர்

### நெடுந்தீவில்...

இவ்வாறு இல்லங்களில் இறைவார்த்தை விதைக்கப்படுகிறது. வேரூன்றிப் பலனளிக்கப் பல தடைகளும் இல்லாமல் இல்லை. தடைகளை நீக்கி முன்னேற முயற்சிப்போர் இடையே துன்பங்கள், சண்டை சச்சரவுகள் நீங்குவதையும், அமைதியும், அன்பும், மகிழ்ச்சியும் ஏற்படுவதையும், அனுபவவாயிலாகக் கண்டு, இறைவனுக்கு நன்றி கூறுகிறோம்.

★இறைவார்த்தைப்பணியாளர் ஒருவர்.

### யாழ். திருச்சபை...

காலின் நேரடி ஆட்சி ஆரம்பமாயிற்று. அதுவும் 36 வருடங்கள் மாத்திரமே நிலைத்தது என்பதையும் மறந்து விடலாகாது.

எனவே ஆறுமுக நாவலர் அவர்கள் கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் பாவித்த (RICE CHRISTIANS) சோற்றுக் (அன்னக்) கிறிஸ்தவர்கள் என்ற சொற்பதம் இம்மண்ணின் கத்தோலிக்கருக்கு எதிராகப் பாவிப்பது பொருத்தமற்றதும் அர்த்தமற்றதுமாகும்.

(வளரும்)

### பரிசளிப்பும் கலைநிகழ்வுகளும்

குருநகர் ஜோசவ்வாஸ் இளைஞர் மன்றத்தினால் கடந்த மாதம் 11ம், 12ம், 13ம் திகதிகளில் யாகப்பர் ஆலய மண்டபத்தில் நடத்தப்பட்ட குருநகர் பங்கைச் சேர்ந்த மாணவ, மாணவிகளுக்கான கட்டுரை, கவிதை, பேச்சு, ஆங்கிலச் சொல்வதெழுதல் போட்டிகளில் தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வுகளும் எதிர்வரும் 16ம் திகதி மாலை 3 மணிக்கு (புதிய நேரம்). சென் ஜேம்ஸ் மகா வித்தியாலய றோமன் அரங்கில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் குருநகர் ஜோசவ்வாஸ் இளைஞர் மன்றமும், யாகப்பர் ஆலய சமய சமூக மகளீர் மணறமும் இணைந்து குருநகர் முன்னேற்ற இளைஞர் ஒன்றியம் என்ற பெயரில் வெளியிடவுள்ள 'ஒடம்' என்ற கையெழுத்துச் சஞ்சிகையின் முதல் இதழின் அறிமுக நிகழ்வும் இடம் பெறவுள்ளது.

### அருள்திரு. ஜோ. பிரான்சிஸ் 75 வயது நிறைவு

அருள்தந்தை ஜோண். ஏ. பிரான்சிஸ் அ.ம.தி தமது 75ஆவது பிறந்த நாளை பூர்த்தி செய்கின்றார்.

இளவாலை புனித ஹென்றியரசர்கல்லூரி, யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி என்பனவற்றின் அதிபராக பணியாற்றியதுடன் பல பங்குகளிலும் பணிபுரிந்தார்.

தற்போது ஏழாலை பங்குத் தந்தையாக பணிபுரியும் அருள் தந்தைக்கு இறையாசீர் வேண்டி செபிப்போம்.

### வாழ்வின்...

தங்கள் வாழ்வின் நோவு, போராட்டம், வேதனை, பலவீனங்கள் தொட்டு உணர்ந்தபடியால் அவர்கள் மற்றவர்களுடைய அக உலகில் நுழைந்து மற்றவர்களின் நோவு, போராட்டம், வேதனை, பலவீனங்களை உணர்ந்து பங்கு கொண்டு தங்களுடைய சுயத் தன்மையை இழந்து விடாமல் அவர்களின் மாயைகளை புரிந்து விளங்கிக் கொள்வார்கள்.

அவர்கள் வாழ்வது நிகழ்காலம். கடந்த காலம் அவர்களுக்கு கல்லறை. அதனைக் கணக்கெடுக்க மாட்டார்கள். வருங்காலத்தை எண்ணி ஏற்க மாட்டார்கள். அவர்கள் வாழ்வு இங்கே, இன்று—இப்பொழுது நடை பெறுகிறது.

### பொதுமக்களின் பாதுகாப்பை...

- அப்பாவிப் பொதுமக்களை மனித கேடயங்களாகப் பாவிப்பதையோ, அவர்களை நேரடியாகத் தாக்கிக் கொல்வதையோ, காயப்படுத்துவதையோ நிறுத்துங்கள்.
- பாடசாலைகள், ஆலயங்கள், வைத்தியசாலைகள், பொதுமக்கள் கூடுகின்ற இடங்கள் போன்றவற்றில் தாக்குதல் இலக்குகளைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.
- சட்டத்திற்குப் புறம்பான முறையில் கைது செய்வதையும், தடுத்து வைப்பதையும் சித்திரவதை செய்வதையும் கொலை செய்யப்படுவதையும் நிறுத்துங்கள்.
- போரில் காயமுற்ற சகல தரப்பினரையும் மனித நேயத்தோடு நடத்துங்கள்.

அண்மைக்காலமாக பொதுமக்களின் பாதுகாப்பை அச்சுறுத்துகின்ற நடவடிக்கைகள் கவலைக்குரிய வகையில் அதிகரித்து வருவதனாலேயே இவ்வேண்டுகோளை விடுகின்றோம். துன்பப்படும் மக்களின் பெயரால் கேட்கின்றோம்: பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யுங்கள்.

★ யாழ். மறைமாவட்ட நீதி சமாதானக்குழு.

### கிறிஸ்து அரசர் ஆலயத் திருநாள்.
(கொய்யாத் தோட்டம்.)

எதிர் வரும் 24-11-96 (ஞாயிறு) காலை 7.00மணிக்கு திருநாள் திருப்பலி இடம் பெறும். நவநாள் ஆயத்த வழிபாடுகள் இம்மாதம் 15ம் திகதி மாலை 4.45 மணிக்கு தொடங்கி 23ம் திகதி மாலை 4.00 மணிக்கு நற்கருணைநாதர் விழாவோடு முடிவடையும். 19-11-96 அன்று காலை 9.00.–12.00 மணி வரைக்கும் நோயாளருக்கான செப வழிபாடு ஆலயத்தில் இடம் பெறும்.

A/30/96

பங்குத். தந்தை.

★ அவரது உறைவிடத்திற்குச் செல்வோம் வாருங்கள் (திருப்பாடல் 132 : 7) ★

இப்பத்திரிகை புனிதவளன் கத்தோலிக்க அச்சக முகாமைட்டாளரால் யாழ்ப்பாணம், பிரதான வீதி 360 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1996 ஆம் ஆண்டு நவம்பர் 15ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. இல QB/1001/58/81